21.12.2020

அசல் வழக்கு எண்: 532-2009

வா.சா.1. ராமசாமி சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி 1,4,7,10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

வடகரை கிராமத்தில் உள்ள சர்வே எண்.1/1 விஸ்தீரணம் 1 ஏக்கர் 72 செண்டு. மொத்த சொத்தான 1 ஏக்கர் 72 செண்டில் எனக்கு 27 செண்டும், எனது மனைவிக்கு 1 ஏக்கர் 45 செண்டும் பாத்தியப்பட்டது. இரண்டு கிரைய பத்திரங்களின் அடிப்படையில் தாவா சொத்து கிரையம் பெறப்பட்டது. 1 ஏக்கர் 72 செண்டில் 27 செண்டை பொறுத்துதான் பிரச்சினை. 1974ம் ஆண்டு நான் 27 செண்டை கிரையம் பெற்றேன். எனது மனைவி 1 ஏக்கர் 45 செண்டு நிலத்தை கிரையம் பெற்றார். மொத்த சொத்தும் மோசம் போக கூடாது என்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. எனது மனைவி கிரையம் பெற்ற 1 ஏக்கர் 45 செண்டிற்கு தென்புறம் நான் கிரையம் பெற்ற 27 செண்டு நிலம் உள்ளது. எனது மனைவியின் கிரைய ஆவணத்தில் தெற்கு நான்கு மாலாக எனது நிலம் இருப்பதாக காட்டப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு நான்தான் விபரம் சொன்னேன். நானும், எனது மகனும் ஒரே வீட்டில் குடியிருந்து வருகிறோம் என்றும் எனக்கும், என் மகனுக்கும் இடையே எவ்வித சண்டை சச்சரவுகளும் இல்லை என்றால் சரிதான். தாத்தப்ப நாயுடு என்பவரிடமிருந்து நான் கிரையம் பெற்றேன். தாத்தப்ப நாயுடு பெயரில் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மனைவி கிரையம் பெற்ற சொத்திற்கு கிழக்கே கிருஷ்ணன். கிருஷ்ணனின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது. கிருஷ்ணன் என்பவருக்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் சொத்தை விற்றவர்கள் என்றால் சரியல்ல. கிருஷ்ணன் கிரையம் பெற்ற பத்திரம் சரியானதா என்றால் சரிதான். கிருஷ்ணன் பெயரிலான பத்திரத்தை நான் பார்த்ததில்லை. தாவா சொத்து உள்ளிட்ட மொத்த சொத்துக்களில் விஸ்தீரணம் 4 ஏக்கர் 24 செண்டு. மேற்படி 4 ஏக்கர் 24 செண்டு நிலம் ஆதியில் வெங்கிடசாமி நாயுடு என்பவருக்கு பாத்தியப்பட்டது. வெங்கிடசாமி நாயுடுவுக்கு 4 ஆண்மக்கள். பெண்மக்கள் உள்ளனரா என்றால அது பற்றி எனக்கு தெரியாது. வெங்கிடசாமி நாயுடுவின் ஆண்வாரிசுகளின் பெயர்கள் தாத்தப்ப நாயுடு,ராமசாமி நாயுடு, நாராயணசாமி நாயுடு மற்றும் குருசாமி நாயுடு. குருசாமி நாயுடு என்பவர் 3ம் பிரதிவாதி செல்வத்தின் தகப்பனார் என்றால் சரிதான். வெங்கிடசாமி நாயுடுவிற்கு தாவா சொத்து உள்ளிட்ட மொத்த சொத்தை தவிர வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வெங்கிடசாமி நாயுடுவின் வாரிசுகள் 4 ஏக்கர் 24 செண்டினை பிரித்த விபரம் எனக்கு தெரியாது உழுது அனுபவம் செய்து வந்தது எனக்கு தெரியும். சாட்சி பின்னர் 4 ஆண்மக்களும்

பிரித்துதான் உழுது வருகின்றனர் என்று சாட்சியம் அளித்தார். எந்த வருடம் வெங்கிடசாமி நாயுடுவின் ஆண்மக்கள் பிரிவினை செய்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. வெங்கிடசாமி நாயுடுவிற்கு பாத்தியமான 4 ஏக்கர் 24 செண்டினை அவரது ஆண்மக்கள் தலா 1 ஏக்கர் 6 செண்டு வீதம் சமமாக பிரிவினை செய்து கொண்டார்களா என்றால் இல்லை. வெங்கிடசாமி நாயுடுவின் ஆண்மக்கள் நால்வரும் பிரிவினை செய்து கொண்ட ஆவணங்கள் எதையும் நான் பார்க்கவில்லை. என் மகன் என் மீது எவ்வித வழக்கும் தாக்கல் செய்யவில்லை. எனது மகன் என் மீது இந்நீதிமன்றத்தில் மு.வ.எண்.638/2008 இடைநிலை மனு எண்.1367/2008 தாவா 27 செண்டை பொறுத்து மட்டும் ஜப்தி செய்து உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றும் வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் நானும், எனது மகனும் சேர்ந்து அந்த வழக்கை தாக்கல் செய்து உத்தரவு பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல.

(1,4,7,10 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோள்படி மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).